செ.வெ.எண்.33 நாள் : 25.01.2017

# அரியலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழுவினர்கள் இன்று (25.01.2016) நேரில் சென்று பார்வையிட்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிப்படைந்த விவசாய நிலங்களை **டாக்டர்.B.கணேஷ்ராம், ஆராய்ச்சி அலுவலர், வேளாண்மை** (Research Officer, Agriculture), **திரு.ஸ்ரீரத்னபிரசாத், துணை பொது மேலாளர், இந்திய உணவு கழகம்** (DGM, Department of Food and Public Distribution), **டாக்டர்.பவுல்பாண்டியன், ஆணையர், கால்நடை, பால்வளம் மற்றும் மீன்வளம்** (Commissioner, Department of Animal Husbandry, Dairying & Fisheries) குழுவினர், தமிழக அரசின் சார்பில் **டாக்டர்.C.N.மகேஸ்வரன், இ.ஆ.ப., ஆணையர், சமூக பாதுகாப்பு திட்டம்** (Commissioner of Social Security Schemes அவர்கள் ஆகியோர் தலைமையில், அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் இன்று (25.01.2017) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

அரியலூர் ஒன்றியம், **அம்மாகுளம் கிராமத்தில்** வறட்சியால் பாதிக்கப்பட்ட **பருத்தி மற்றும் மக்காச்சோளம்** பயிரிடப்பட்ட நிலத்தினையும், திருமானூர் ஒன்றியம், **கீழப்பழூர் கிராமத்தில்** வறட்சியால் பாதிக்கப்பட்ட **மக்காச்சோளம்** பயிரிடப்பட்ட நிலத்தினையும், **சாத்தமங்கலம் கிராமத்தில்** வறட்சியால் பாதிக்கப்பட்ட **பருத்தி மற்றும் மக்காச்சோளம்** பயிரிடப்பட்ட நிலத்தினையும் பார்வையிடப்பட்டது. மேற்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை குறித்த அறிக்கையினை அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எம்.சந்திரகாசி, ஜெயங்கொண்டம் சட்ட மன்ற உறுப்பினர் திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திரு.ரெங்கராஜன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.யோகேஸ்வரி, உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி.கங்காதாரணி, கோட்டாட்சியர்கள் (அரியலூர்) திரு.மோகனராஜன், (உடையார்பாளையம்) திருமதி.டினாகுமாரி, வட்டாட்சியர்கள் (அரியலூர்) திரு.முத்துகிருஷ்ணன், திரு.திருமாறன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.சதானந்தம், வேளாண் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர்.